414

உ

முருகன் துணை

கள்ளகணவன் ஆசையால் பிள்ளையும்புரு
ஷனையும் வெட்டி பரணையில் வைத்த

# காமாக்ஷி சாமார்த்திய சிந்து.

இரண்டுபாகம் அடங்கியது.



OFFICE OF THE REGISTRAR OF B...
18 SEP 1934
MADRAS

M. கண்ணையா பிள்ளை இயற்றியது.

K முனுசாமி அவர்களால்

சென்னை ஸ்ரீ ஆதிமூலம் பிரெஸ்ஸில் பதிப்பிக்கப்பட்டது

1934 பை-0-0-6

[illegible]த்தகம் கிடைக்கும் இடம்
[illegible] பெருமாள் கோவில் தோட்டத் தெரு

0-/1 MCP,K
N34
18621

உ

கள்ள கணவன் ஆசையால் பிள்ளையும் புருஷனையும்
வெட்டி பானையில் வைத்த

# காமாக்ஷிசாமார்த்தியசிந்து.

இரண்டுபாகமும் அடங்கியது.

(விருத்தம்)

அகிலமதில் மாதர்களால் நடக்கும் சூதை
மகிழாகசிந்து யன்பாடக்கதை
சித்திகணபதியே சிரஞ்சாய்த்தேன்
இத்தறியேவந்தருள்வா குகனே

தெம்மாங்கு

1 அன்புள்ள நண்பர்களே அறிந்திடுவீர் பாட்டதனில்
தென்புடனே நின்றுகேளும் தீவிரகொலை விபரம்
செல்வன் கண்ணன் பாட்டு ஜெகமெங்கும்புகழ் காட்டு

2 திருநெல்வேலிக்கடுத்த தென்னாத்தூர் நகர்தனிலே
பெருமையுடனிருந்த பெரும்தருமலிங்க செட்டி
சுந்தரிபெண்மாதை மாலை சூட்டினார் பூங்கோதை

3 கலியாணம் செய்துவெகு காலாகாலம் கழித்து
சலியாமல் பெண்குழந்தை சாசமுடன் பெற்றெடுத்தா
அவனியோர் புகழ்பாரே காமாக்ஷி என்றுபேரே

4 அழகுள்ள காமாக்ஷியும் ஆளாகிவிட்ட தின்பின்
கந்தசாமி ரெட்டியர்க்கு நாயகியைமாலையிட்டு
வாழ்ந்துவரும்போது குறைவந்ததே பெரும்சூது

5 அடுத்தவருஷத்திலே காமக்ஷியின் தாய்தகப்பன்
விடுத்தார் எமலோகம் வேனஜனம் தானழுக
சொத்துமொன்றாய்போக கந்தன் மெத்தசுகமாக

6 காமாக்ஷி கந்தசாமி அழகாகவாழ்ந்துவர
கெம்புகல் சிலையைபோல இளைத்துபெற்ற ஆண்குழந்தை
ஏகசுகமாக இருந்தார் புகழாக

7 உலகமெல்லாம் புகழ உதித்துவர ஆண்குழந்தை
கலகமில்லாமல் பெரும் கவனமுடன் வளர்த்துவந்து
பாலன் சொக்கலிங்கம் பெயர் பகர்ந்திட புவிசங்கம்

8 செல்வசிறு பாலகனை சீராய்வளர்த்து வந்து
சொல்லும் தமிழ்பள்ளியிலே சொகுசாகதான் படித்து
வாழ்ந்து வரும்போது குறை வந்ததே பெருங்குறை

## தொண்டிசிந்து

கந்தசாமி காமாஷியும் வெகு
காம்பீரமாக சுகவுகபோகமாய்

வாழ்ந்துவருகையிலே வந்த
வம்புபெருந்துன்பமதை வாசித்தறிவீர்

கடைதனில் வேலைசெய்யும் அந்த
கட்டழகன் வீராசாமி என்பவன்மேல்

மோகம்மிகவும் கொண்டு அவனை
போகம்செய்ய பூவையவள் சோகமுடனே

அந்தம் மதியுங்கெட்டு செய்வதை
அறிந்திடுவீர்பின்னால் தெரிந்திடுவீர்

தந்தினம் தனதனனம்

## எந்தனது திருநாடு

1 பத்துவயதாகும்பால சொக்கலிங்கம்பள்ளி
படித்துவர சென்றிருக்க பாவிபெருங்கள்ளி

2 சொந்தநாதன் ஜவுக்காக வேலைவெளிசெல்ல
அந்தமுள்ள காமாஷியும் ஆனந்தமாய் துள்ள

3 பட்டப்பகலான பனி ரெண்டுமணி வேளை
கிட்டமுடன் வந்துசேர்ந்தான் வீராசாமிகாளை

4 வீராசாமியை பார்த்தவுடன் சோரதலைகுள்ளி
சேரெணவே மோகபெரு கோறமாக தள்ளி

5 பிள்ளை யில்லை புருஷனில்லை பேசதருணமிதுவே
சன்னையொன்றும் வாராதிப்போ ஜல்திசேருருவே

6 கந்தசாமியை காமாஷியும் பலவிதமாய் பேசி
வந்தகுறை காரணத்தை , கூறுவேன்வாய் கூச

## (உடுமலை முத்துசாமி பெட்டு)

க மாமா மரிக்கொழுந்தே தேனே எந்தன்
மைந்தனவன் வந்திடுவான் தானே உடன்

சந்ததடி செய்யாது சுகம்தந்திடுவாய் எந்தனுடன்
கலந்து மனம் குளிர்ந்து

ஆ வேலைக்காறன் எந்தனுடன் நேசம் வெளி
பார்த்து விட்டால்வந்து விடும் மோசம் அம்மா
பங்கஜம்வாரும் சங்கதிகேள் உங்களுட ஜாதியுடன்
கூடும் சுகம் தேடும்

கா உன்னைவிட பொன்னழகன் யாரு மனம்
ஒத்துவிட்டால் நத்துபோதும் கூறு நீயும்
கத்தவேண்டாம் கட்டழகா நத்திகளை கட்டியுடன்
சேரு சுகம் பாரு

ஆ பெண்டுகளின் வார்த்தையது தெம்பு உடனே
பேசிவிட்டால் வந்துவிடும் தீம்பு அம்மா
பேதையான உன்புருஷன் காதிலவர் கேட்டுவந்தாள்
வம்பு வரும் நம்பு

கா பாலன்சொக்கலிங்கம் பள்ளி போக பாவி
பால்யனுடன் வம்புதும்பு பாக பட்டு
கட்டிலில் படுத்தணைத்து கட்டிமுத்தமிட்டிருக்கும்
போது வந்த தீது

## கும்மி

1 சோரசெய்ய விராசாமிபுருடனும், சுந்தரியாள் சிறுகாமாக்ஷியும் கோறமுடன் சப்ரமஞ்சத்தின் மெத்தையில் கொக்கோகலீலை யுடனி ருக்க.

2 பனிரெண்டு மணிவேளைபள்ளி விட்டு, பாலன் பசியாறவந்திடவே உன்னிதமாய் பெற்றதாயும் வேலையாளும், ஊக்கமுடன் கண்ணால் கண் டுவிட்டான்.

3 பார்த்தவுடன் சிறுபாலன் சொக்கலிங்கம் பள்ளிகூடத்திர்க்கே தான்திரும்பி, வேர்த்தமுகமலர் பாதையுடன் மனவேதனையாகவே வ ந்து விட்டான்.

4 பாலன்சொக்கலிங்கம் பார்த்திடவே படுபாவை யிளஞ்சிறு காமா க்ஷியுப கோலமுடனிரு பேருந் தப்பிக்கவே கூறிடுவேனென்று சூட்ச மென்றாள்.

5 அச்சமிலா பெருவார்த்தைதனைகேளும் இச்சையுடனென்றும் கூடி டலாம் கச்சிதமாய்உயர்கட்டும் பரணையில் கண்டேனையா இலைகட் டுகளை

6 கட்டழகா நீயும் கத்தியோடுஉயர் கட்டியபரணைமேலிருக்க சட் டென சென்றமே செல்வனைகூப்பிட்டு ஜல்தியாய் மேலுயர் தூக்கிடு வேன்.

7 எட்டியிழுத்து யிலை கட்டெடுக்கையில் வெட்டிவிடு பட்டாகத்தியினல் வெட்டிய முண்டத்தை கட்டிய சாக்கினில் வைத்துவிட்டுஉயர்வந்துவிடு

8 இந்தவிதமாக யோசனை செய்துமே இட்டுவந்தவனை வெட்டிவிட சந்தடிசெய்யாது வெட்டுகையில் சொந்த கட்டழகன்செட்டிவந்துவிட.

## உத்தமனுஞ்சித்தினி மூன் என்ற லாவணி

வெட்டுபட்ட தண்டம்தும் வீராசாமிபோலிருக்க
வேசமாகவந்தார் கந்த சாமி சாமி — அந்த
கட்டழகி நாதன்வர கண்டுவிட்டாள் காமாஷியும்
சட்டெனவே உள்மறைந்து ஓ — ஓ — நாதா
பணிரெண்டுமணிவேளை பள்ளிபது விட்டிடவே
பாலகனும் இன்னும்வர காணேன் காணேன் — உடன்
சீக்கிரம் நீபள்ளிசென்று செல்வன்சிறு பாலகனை
சிறப்புடனழைத்து வீடு வாரும் வாரும் — வீட்டில்
நாதசமையலிப்போ சாதம் கொதிக்குதிங்கே
வாதுபேசாதே ஜல்தி போகும் போகும் — சொல்ல
உத்தமனும் ஒப்புக்கொண்டு உண்மையென்று நம்பிவெளி
ஊக்கமுடன் பாலகனை தேட தேட — அவர்
தேடபிள்ளை வாடமனம் நாடிமிகஆவலுடன்
ஓடிபார்க்கபின் திரும்ப ரத்தம் ரத்தம் — பாலனை
அறுத்த ரத்தம் பரனை விட்டுதான் கசிந்து
பஷமுள்ள கந்தசாமி மேலே மேலே — அது
சொட்ட சொட்ட ரத்தமது சுந்தரனும் பார்த்துமிக
சேகமுடனே மனது கோபம் கோபம் — அடி
உத்தமியே பத்தினியே உண்மை பதிலோதிடுவாய்
உயரிருந்து சொட்டு ரத்தம் ஏது ஏது

## வளையற்சிந்து

1 பத்தினிபெண் — மாதரசே
பாவையேயபதி லோது — நான்
பார்த்திடவே சூது — உயர்
பரணை தனி லேது — மேல்
பாவி ரத்தம் உருகியேசிழ் ஒழுகுவதேதிது
கேட்டுடுவீர்
2 உத்தமரே — கேள்
உருகுவதொன் றில்லை

உண்மைஎர்தன் சொல்லை    சத்தம்
வைத்துவ மில்லை    பூனை
உருட்டி எலிபிடித்துண்டு கடித்துவிட்டதோ தொலலை

3 சந்தேகம்    கொண்டுமன
சஞ்சலமாய் தானே    அடி
சாசர்ஞ்சித மானே    பதில்
சாற்றிடாமல் தேனே    உடனே
ஜல்திஎணிபோட்டுஉயர் ஏறிடுவேனுனே

4 ஏணிகொண்டு    போட்டு உயரம்
ஏரிபார்க்கும் போது    அங்கு
ஏர்படும்பெரும் தீது    வெளி
எடுத்துரை தமி ழோது    கெட்ட
ஏந்திழை சிறு காமாஷியும் எத்தனித்த சூது

5 கந்தசாமி    வேதனையால்
விசனமேற்கொண்டிருக்க    வெளி
விரைவுடன்வர நடிக்க    பெண்
விவரமாய்கண் ணடிக்க    எட்டி
விந்தைபெரும் செட்டியாரை கெட்டியாய் மயிர்பிடிக்க

6 கண்ணுர    கண்டுமணம்
களிப்புடனே பார்க்க    ஏர
கன்னியாள்முகம் வேர்க்க    கந்தன்
கலங்கிமணம் பூர்க்க    செட்டி
கட்டழகன்சாற்றி எணிகொண்டு உயர் ஏர

7 தட்டாமல்    தலைவெட்டுஎன்று
தட்டிவிட்டான் ஏணி    கந்தன்
தடுமாடிமணம் நாணி    வெட்டி
தாக்கிவிட்டான் ஊணி    செட்டி
தலைபிடித்துவெட்டமுண்டம் தரையில் வந்ததே கோணி

8 துடிக்கபிள்ளை    புருடனையும்
துண்டுரெண்டாய் வெட்டி    தோட்ட
துரையில்பள்ளம் கெட்டி    முண்ட
துண்டுகளை கொட்டி    மூடி
துரிதமாய் வெளியாருமரியாமல் செய்தால்பட்டி

## வசனம்

பிள்ளை புருடனிருவரையும் வெட்டியபின் இருவரும் வெளிஊரு
க்குபோக யோசிப்பது மனைவியைவெட்ட யோசிப்பது

## கும்மி

1 கந்தசாமிதேவிகமலமும் அவள்விடிய காலையிலே தானெழுந்து நேரும் தொழில்செட்டி மாட்டு கொட்டாயினில் சேரும்பெருமைதப் பைசாணம்வார.

2 காமாக்ஷியும் கந்தசாமியும் வெகு அந்தர யோசனை பேசிடவே செம்புசிலையைபோல் செழிமையாளதை செட்டாகவே நின்று கேட்டு விட்டாள்

3 இருவர்குறல் தனிகேட்பதே தவிர இன்னொன்ற ஆள்தெரியவில்லை தீரமுடனே சொந்தபுருஷன் குறல்சத்தம் விரைவாகவெளி கேட்பதினால்

4 சொந்தநாதன் வீடுவந்துவிட்டாலந்த சங்கதிகேட்டு தெரிந்திடலாம் சிந்தைகலங்குதே வந்ததுவரட்டும் சேரியில் வரட்டும் பார்த்திடலாம

5 செட்டிபெண்ணின்வார்த்தை கேட்டு கொண்டுகந்தன் வெட்டிடும் பட்டா இடுப்பில்லவைத்து எட்டுமணியானவுடன் சேரிபேசி சென்றுனமனைவிடருகில்

6 கமலமும்மனசந்தேகங்கொண்டுமே காத்திருந்தாள் வெளிவாசவாசர்படி ஆத்திரமாய் பட்டாகத்தியிடுப்புனில் ஆரணங்காளதை பார்த்து விட்டாள்

7 கெட்டிக்காறசிறு செட்டிபெண்ணுள் வார்த்தைகேட்டு இருதலை வெட்டிவிட்டான் பட்டியினால நம்மை வெட்டிவிட்டு வெளிபக்குவமாய்இனிசென்றிடுவான்

8 விட்டுவெளிதூரம்என்று சொல்லியவள் விலகிய தாய் வீடுதான் திரும்ப தீட்டுவரகந்தன் கெட்டது காரியம் செட்டிபெண் வீட்டையே தான் திரும்ப

9 உந்தனாலே எரதன் சிந்தை துக்கமாகபிள்ளை புருடனை நானிழந்தேன் சொந்தமாககாலை கொட்டாய் வேலைசெய்ய கட்டபூகியவன் வந்திடுவாள்

## வசனம்

அன்றிரவு கமலத்தை வெட்டி விடயோசித்து கந்தன் கமலம் இருவரும் நித்திரையிலிருக்க பனிரெண்டுமணி வேளையிலே கமலம் கத்தியோடு காமாக்ஷிவீடுவந்து கதலை தட்டுதல்.

## கும்மி

10 வேகமுடன்பர கந்தன் தாளைவிரைவுடனே வெளிதாள்திரக்க மோக குரியுடன் கமலம் காலில் மோதிகடித்தது பாம்பென்னாரம்

11 கட்ட ழகன் நாதன்காலை குனிந்துமே கவனமுட னூற்றபார்க்கையிலேவட்டி விட்டாள் தலை கத்தியினாலிரு கண்ட துண்டமாக தான்வீழுக

12 வெட்டினாதோர் முண்டம் கீழ்பதைக்க பெரும்வேங்கையைபோலவன் உள்நுழைய எட்டிபார்த்த சிறுசெட்டி பெண்ணானவள் சட்டெனவே விரைவாய் மறைய

13 ஓடிபிடித்துமே தேடியவளை பின்வாடியிங்கே எனனிழுத்துகாடியகன்ன புருஷண் சிரசதை நாயகியே கைபிடித்திட்டி

11 எட்டிபிடித்தாளே செட்டிபெண்ணின் மயிர் ஏகபனப் பெரும் கோபமுடன் நெட்டியிழுத்துமே ரொண்டுவராள் தலைகத்தியுடன் சிற மாதலனை

1 கத்தியை கையினில் தானெடுத்து மாதுதலையதை செட்டிபெண் கையில் கொடுத்து எட்டியமயிரதை தான் பிடித்து நெட்டிய போலீசு கொண்டுவந்தாள்

பட்டியின் உண்மை கேளுங்களென்று போலீசாரிடம் தானுரைக்க சட்டடென மாதரிருவரைம் அப்போ போசார் லாக்காபில் போட்டைத்தார்

3 பொழுதுவிடிந்ததும் போலீசார்களும் டாக்ட்டருடன் வீட்டில் வந்துபார்த்து சோதனை செய்து தோட்டதூரவினில் புதைத்த இரு பிணங்கள் தானெடுத்து

4 கண்டபிணங்களை சிட்சைசெய்து பின் கொண்டு புதைத்திடதந்து விட்டு உத்தமர் ஜட்ஜிகோர்ட்டில் உங்களின் உண்மையை சொல்லென்று கேட்க்கலுற்றார்

5 அஞ்சிபயந்துமே குற்றத்தை செய்ததால் ஆதியந்தமோடு கூறிடவும்நீதியரிந்தவர் ஜட்ஜிதுரையவர் நியாயத்தை ஆராட்சிசெய்யலுற்றார்

6 அரிந்ததோர் ஜட்ஜிதுரையவர்களும் ஆரிழை காமாக்ஷிக்கேதுரைத்தார் ஆயுள் வரையிலும் அந்தமான் சிட்சை யென்று சொன்னாராம் நேசர்களே

7 அன்பர்களே கதைகண்டறிந்தின்றோட அன்னியமாதரின் அசை விட்டு தென்புடன்சொந்த மனைவியைகூடிபின் குவலயத்தில் வாழ்வீர் நேசர்களே

இரண்டாம்பாகம்முற்றிற்று.